## மிருகக்காட்சிச் சாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிருகக்காட்சிச் சாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்தம் மிருகங்கள் மீள்பெறுமதியிடப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் யானைகள் தவிர்ந்த ஏனைய மிருகங்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் மதிப்பிடப்பட்டிருந்தன.

(ஆ) பின்னவல மற்றும் தெஹிவளை யானைகளை மதிப்பிடுகையில் கருத்திற்கொள்ளப்பட்ட பெறுமதிகளில் ஒரு புள்ளிக்கு ரூபா 270,000 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதிலும் இதற்காக காரணமான விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த ஆண்டுகளில் அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிராத ரூபா 45,538,032 தொகையான செலவினங்கள் 2012 ஆம் ஆண்டின் கடப்பாடாகக் காண்பிக்கப்பட்டு ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்காக 2013 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 5,365,988 தொகையான செலவினங்களுக்காக 2012 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட மிருகங்களுக்காக ரூபா 743,735 தொகையான சுங்கக் கட்டணமாக செலவிடப்பட்டிருந்த போதிலும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 243,735 தொகை மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 500,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நுழைவுச் சீட்டுப் பெறும் கரும பீடத்திற்கு வழங்கப்பட்ட கிரயம் ரூபா 261,903 தொகையான (முகப் பெறுமதி ரூபா 43,580,850 தொகையான) மிகுதி நுழைவு இருப்பு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நலன்புரி சிற்றுண்டிச்சாலைக்கான மின்சாரச் செலவினம் தீர்க்கப்படுகையில் ரூபா 251,790 தொகை சிற்றுண்டிச்சாலை முகாமைத்துவத்திடமிருந்து பெறவேண்டிய போதிலும் இது தொடர்பான நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது ரூபா 3,049,123 பெறுமதியான நினைவுச் சின்னங்களின் இருப்பு பதிவழிக்கப்பட்டிருந்தது. பதிவழிப்புத் தொடர்பாக விபரமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மிருகக்காட்சிச்சாலை பணிப்பாளரின் பதிலின் பிரகாரம் மீள மேற்கொள்ளப்பட்ட இருப்புப் பெறுமதியிடலில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு ரூபா 5,604,251 ஆகவும் இதன் பிரகாரம் இருப்புக் குறைவு ரூபா 896,814 ஆகவும் மாத்திரம் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பதிவழிப்புகளின் வேறுபாட்டிற்கான சீராக்கங்கள் 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், 2012 ஆம் ஆண்டின போது கொள்வனவுகளும் விற்பனைகளும் இறுதி இருப்பிற்கு சீராக்கப்பட்டதை அடுத்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு பெறுமதி ரூபா 5,238,733 ஆக கணக்கீடு செய்யப்படக் கூடிய போதிலும் இதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்த இருப்புப் பெறுமதி ரூபா 2,824,799 ஆகக் காணப்பட்டது.

(எ) நலன்புரி சிற்றுண்டிச்சாலைக்காக மின்சாரப் பட்டியல்கள் தீர்க்கப்படுகையில் இரு தடவைகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் மின்சார சபைக்கு ரூபா 452,198 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் செவன நிதியம் எனும் பெயரில் ரூபா 500,000 தொகை 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை தீர்ப்பதற்கோ அல்லது தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுவதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நலன்புரி சிற்றுண்டிச்சாலைக்காக மாதாந்தம் ரூபா 20,000 தொகையான மின்சாரச் செலவினமாக ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவுகள்

மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதற்கான எழுத்து மூல உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 பெப்ரவரி 10 ஆம் திகதி சுங்கத்தால் அரசுடமையாக்கப்பட்டதன் பின்னர் பாதுகாக்கப்படுவதற்காக தேசிய வனவிலங்கிற்கு ஒப்படைக்கப்பட்ட 98 பட்சிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் கட்டளையில் மீள உரிமையாளருக்கு வழங்கப்படுகையில் மிருகக்காட்சிச் சாலை செலவிட்ட தொகையாக அறவிடப்பட்ட ரூபா 985,000 தொகை நானாவித வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது. அத் தொகை கணிப்பிடப்பட்ட அடிப்படை தொடர்பான விரிவான அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 110 | இறந்த விலங்குகள் தொடர்பான நட்டப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 156(2) | முறையான நடவடிக்கை இன்றி ரூபா 300,000 பெறுமதியான 37 ஆடுகள் தேசிய கால்நடைச் சபைக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | முறைப்படியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 397,537,423 தேறிய மிகையினை விளைவித்துள்ளதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய மிகை ரூபா 373,338,296 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 24,199,127 ஆல் அதிகரித்திருந்தது. மிருகக் காட்சிச்சாலைக்கு அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற வருமானம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 17,178,529 ஆல் அதிகரித்தமை நிதிவிளைவுகளில் அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதியத்தின் ஒட்டு மொத்த வருமானம் ரூபா 1,105,592 ஆல் அதிகரித்திருந்ததுடன் செலவினம் ரூபா 23,093,536 ஆல் குறைவடைந்திருந்தது. மேலும், மொத்த நுழைவுப் பத்திர வருமானம் கடந்த ஆண்டு வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 17,896,110 ஆல் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களை பகுப்பாய்வு ரீதியாக மீளாய்வு செய்த போது வெளிப்படுத்தப்பட்ட முக்கிய புள்ளிவிபரத் தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| | 2012 | 2011 |
|---|---|---|
| | % | % |
| மொத்த நுழைவுச்சீட்டு வருமானங்களின் அடிப்படையில் மொத்த இலாபம் | 63 | 58 |
| மொத்த வருமானத்தின் அடிப்படையில் நுழைவுச்சீட்டு வருமானம் | 94 | 96 |
| மொத்த வருமானத்தின் அடிப்படையில் நானாவித வருமானம் | 06 | 04 |
| மொத்த வருமானத்தின் அடிப்படையில் மொத்த செலவு | 39 | 44 |

| | | |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்களின் அடிப்படையில் (காசு தவிர்த்து) ஞாபகார்த்த பொருட்களின் இருப்பு | 14 | 29 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 பார்வையாளர்களின் வருகையும் வருமானமும்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக தெஹிவளை மிருகக்காட்சி சாலை மற்றும் பின்னவல யானைகள் சரணாலயத்தைப் பார்வையிடுவதற்காக வருகைதந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானங்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

**(i) தெஹிவளை மிருகக்காட்சி சாலை**

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | வருகைதந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் | வருகைதந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் |
| | | ரூபா | | ரூபா |
| உள்நாட்டவர்கள் | 1,412,062 | 110,039,210 | 1,689,755 | 130,922,050 |
| வெளிநாட்டவர்கள் | 21,188 | 25,108,000 | 20,446 | 25,178,750 |
| மொத்தம் | 1,433,250 | 135,147,210 | 1,710,201 | 156,100,800 |

தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு வருகைதந்த வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கையினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 742 நபர்களினால் அல்லது 3.6 சதவீதம் ஆல் அதிகரித்திருந்ததுடன் அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 70,750 இனால் அல்லது 0.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இவ்வாறே உள்நாட்டு பார்வையாளர்களின்

எண்ணிக்கையும் வருமானமும் முறையே 277,693 நபர்களினாலும் ரூபா 20,882,840 தொகையினாலும் குறைவடைந்திருந்தன. இதன் பிரகாரம் எதிர்காலத்தில் பார்வையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பின்னவலை யானைகள் சரணாலயம்**

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | வருகைதந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் | வருகைதந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் |
| | | ரூபா | | ரூபா |
| உள்நாட்டவர்கள் | 497,157 | 36,083,510 | 463,982 | 34,053,050 |
| வெளிநாட்டவர்கள் | 266,297 | 455,554,750 | 264,452 | 448,625,000 |
| மொத்தம் | 763,454 | 491,638,260 | 728,434 | 482,678,050 |

பின்னவல யானைகள் சரணாலயத்திற்கு வருகைதந்த வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கையினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1845 நபர்களால் அல்லது 0.69 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 6,929,750 ஆல் அதிகரித்திருந்தது. உள்நாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கையும் அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானமும் முன்னைய ஆண்டைவிட முறையே 33,175 நபர்களினாலும் ரூபா 2,030,460 தொகையினாலும் அதிகரித்திருந்தன.

ஆண்டின் மொத்த நுழைவுச் சீட்டு வருமானத்தில் 78 சதவீதம் பின்னவல யானைகள் சரணாலய நுழைவுச் சீட்டு வருமானங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு அன்பளிப்பாக சுற்றுலா சபையில் ரூபா 22,634,131 தொகை பெறப்பட்டிருந்ததுடன் அத் தொகை பின்னவல யானைகள் சரணாலயத்தின் மலசலகூட முறைமையைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ் அன்பளிப்புத் தொகை வழங்கப்படுகையில் ஒரு வருடத்திற்கு 1000 வெளிநாட்டு அனுமதிப்பத்திரங்களை சுற்றுலாச் சபைக்கு வழங்க வேண்டியதாக சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் தலைவர் அறிவித்திருந்த போதிலும் அந் நுழைவுச் சீட்டுக்கள் எந்தளவு காலத்திற்குரித்தானது, எந்த நபரின் அங்கீகாரத்தில் அவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்ற விடயங்கள் கருத்திற்கொள்ளப்படாது மிருகக் காட்சிச் சாலைப் பணிப்பாளரால் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்படுவதன் மூலம் ஒரு வருடத்திற்கு மிருகக் காட்சிச் சாலைக்கு ரூபா 2,000,000 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போவதனை மதிப்பிடக்கூடியதாக இருந்தது.

(ஆ) மிருகக்காட்சிச் சாலைகள் திணைக்களத்தின் பிரதான சிற்றுண்டிச் சாலை 2009/10 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கிடப்படுவதற்கு மனுக் கோரலின் போது சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய காரணிகளாக கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் பதிவு, சிற்றுண்டிச் சாலை சேவைகள்/ ஹொட்டேல் உரிமையாளர்கள் என்ற போதிலும் 2012/13 ஆம் ஆண்டின் போது அக் காரணிகள் அகற்றப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமை பெற்ற, சிற்றுண்டிச் சாலை/ வியாபாரக் கொட்டகைகள் கொண்டு நடாத்தப்படுவது தொடர்பாக 03 வருடகால அனுபவம் வாய்ந்த நபரென மாற்றப்பட்டிருந்தது. இவ்வாறு மனுதாரர்களின் தகைமைகள் குறைவடைந்தமையால் வெளிநாட்டவர்கள் அடங்கலாக பார்வையாளர்களுக்காக உயர் தரத்திலான உணவும் குடிபானங்களும்

அடங்கலாக உயர் சேவையை வழங்குவதற்காக ஏற்ற மனுதாரரைப் பங்கேற்கச் செய்வதற்கு முடியாதிருந்தது.

இரண்டாம் மனுக் கோரல் சந்தை விலை கோரல் முறைமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 மனுதாரர்களுக்கு அறிவூட்டல்கள் வழங்கப்பட்ட போதிலும் அச் சந்தர்ப்பத்தின் போது இலக்கிடப்பட்ட மனுக்களை சமர்ப்பித்திராமையால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

2012 மார்ச் 08 ஆம் திகதி பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு மிருகக் காட்சிச்சாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த அச் சிற்றுண்டிச் சாலை 2013 யூலை 15 ஆம் திகதி வரை மேற்குறித்தவாறு ஏற்ற மனுதாரர் தேர்ந்தெடுக்கப்பட முடியாமையால் பொது மக்களுக்காக திறக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) கோனபல பண்ணையும் மிருகக் காட்சிச் சாலைக்கும் இடையே விலங்குகள் மாற்றப்படுகையில் முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

பணிப்பாளரின் பதிலின் படி 2013 ஆம் ஆண்டு முதல் பண்ணைகளுக்கிடையே விலங்குகள் மாற்றப்படுகையில் முறையான நடைமுறை பின்பற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஞாபகார்த்த பொருட்களின் விற்பனைக் கூடத்தில் விற்பதற்காக காலத்திற்கு ஏற்ற ஞாபகார்த்த பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொருட்களின் விற்பனை மிகக் குறைவடைந்தமையால் விற்பனைக் கூட வருமானம் குறைவடைந்திருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம் - 2012

2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத்திட்டத்தில் ஒவ்வொரு காலாண்டிற்குமான பண ஒதுக்கீடு சதவீதமாக மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பணப்பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன்

பிரகாரம், இச் செயற்பாட்டுத் திட்டம் நிறுவகத்தின் வருடாந்த இலக்குகளைத் தெளிவாகவும் சரியாகவும் காண்பிக்கும் ஆவணமாக தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**4.2 செயலாற்றல் அறிக்கையின் பிரகாரமான செயலாற்றல் - 2012**

மீளாய்வாண்டின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒவ்வொரு செயற்திட்டத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட மொத்தச் செலவினம், உள்ளபடியான மொத்த செலவினம் மற்றும் செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் போன்ற தகவல்களைத் தயாரிப்பதற்கு நிதியம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதான செயற்பாடுகளின் படி மாத்திரம் ஆண்டின் பண ஒதுக்கீடு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்பாடுகளின் செலவினமும் அதன் பௌதீக முன்னேற்றம் அல்லது நிதி முன்னேற்றம் வெவ்வேறாக மீளாய்வாண்டின் இறுதியில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 04 செயற்திட்ட நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் அத்தினத்தில் அச் செயற்பாடுகளின் முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் நிலவாமை அவதானிக்கப்பட்டது.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

2012 ஆம் ஆண்டிற்காக நிதியத்தால் உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 பாதீட்டுக்கட்டுப்பாடு**

(அ) மீளாய்வாண்டில் நிதியத்தின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மூலதனச் செலவாக ரூபா 425,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 349,792,198 ஆனமையால் மிகுதி ரூபா 75,207,802 தொகையான

அதாவது ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த ஏற்பாட்டில் 17 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) பின்னவல புதிய மிருகக் காட்சிச்சாலை, அம்பாந்தோட்டை சபாரி பூங்கா மற்றும் தெகிவளை மிருகக் காட்சிச்சாலை, அம்பாந்தோட்டை சபாரி பூங்கா மற்றும் தெகிவளை மிருகக் காட்சிச்சாலையின் நிர்மாணிப்புகளுக்காக மூலதனச் செலவினங்கள் மதிப்பீட்டின் மூலம் ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மிருகக்காட்சிச் சாலை திணைக்களத்தின் செலவின தலைப்பின் மூலமும் அந் நிர்மாணிப்புகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், செயற்திட்டத்தின் கீழ் உரிய செயற்பாடுகளுக்காக வெவ்வேறாக இனங்கண்டு பணம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மூலதனச் செலவினங்களுக்கு உரிய நிர்மாணிப்பு மீதி சரியாக இனங்காணப்பட முடியவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) ஏடுகளைப் பேணல்
(ஈ) கொள்வனவுகள் மற்றும் விலங்குகளின் உணவு வழங்கல் முறைமை
(உ) அச்சிடப்பட்ட நுழைவுப்பத்திர இருப்புக்களை ஏடுகளில் பதிதல்
(ஊ) ஞாபகார்த்த பொருட்கள் விற்பனை மற்றும் இருப்புக் கட்டுப்பாடு
(எ) விலங்குகளை மதிப்பிட்டு மரணமடைந்த மிருகங்களுக்காக அறிக்கைகளை பேணுதல்
(ஏ) வாகனக் கட்டுப்பாடு